யான சம்பளம் கொடுக்க முடியாது. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இப்போது சற்று உயர்த்தி, பிறகு படிப்படியாக இணையான சம்பளம் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி இருக்கும்படியான பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் இங்கே, தமிழ்நாட்டில் புதிய திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு நல்ல வரவேற்கத்தக்க விஷயம். கூலியிலிருந்த வித்தியாசமும் எடுக்கப்பட்டு 1—1—1990 முதல் சமமான கூலி, தனியார் தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கக்கூடிய கூலி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் பிளான்டேஷன் ஆக்ட் பிரகாரம், சட்டப் பிரகாரம் உள்ள இதர சலுகைகளும்—அவர்களுக்கு இருக்கும்படியான சர்வீஸ் சலுகைகள், குடியிருக்கும் வீடு பற்றிய சலுகைகள், லீவு சலுகைகள் போன்றவை—அவர்கள் தகுதியான சம்பளம் பெறும் போது, அவற்றையும் அமல் ஆக்குவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, 'TANTEA' என்று சொல்லப்படுகிற இந்தத் தேயிலைத் தோட்ட வாரியம் அந்தத் தொழிலாளர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இதுபற்றி முடிவு செய்ய அறிவுறுத்தலாம்.

பொதுப்பணித் துறையில் தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்துதல்.

* 7683 திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொதுப் பணித் துறையில் 18 ஆண்டுகளாக தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தினக்கூலி பணியாளர்கள் (NMR) சம்பந்தப்பட்ட விவரங்களைத் தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்துப் பொதுப் பணித் துறை வட்டங்களிலிருந்தும் சேகரித்து, அவர்களது கல்வித் தகுதி, வயது மற்றும் பணி நியமன முறை முதலிய தகுதிகளின் அடிப்படையில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் சற்று காலதாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 480 நாட்கள் பணி புரிந்தாலே, அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது விதி. ஆனால் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், பல பேரை உடனடியாக நீக்குவது, மறுபடியும் எடுப்பது என்ற முறையில் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைத் தொடர்வது சரியல்ல என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அது காலதாமதம் இல்லாது விரைவில் முடிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, அம்மையாருக்கு ஒரு செய்தியைச் சொல்கிறேன். 1984 ஆம் ஆண்டிலிருந்தே இந்தப் பிரச்சினையை யாரும் அணுகவில்லை. 1984, 1985, 1986, 1987, 1988 முடிந்து கலைஞருடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு இந்த அவையிலே யாரும் கேட்காமலேயே, நாங்களே—அமைச்சர்கள்—கலைஞருடைய ஆலோசனையின் பேரிலே நானே அறிவித்தேன். இப்படி பொதுப்பணித் துறையிலே ஆண்டுக் கணக்காக இருப்பவர்களை நிரந்தரம் செய்யலாமா என்று யோசித்து 10 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து ஒரு முடிவு எடுத்து இந்த அவையிலே அறிவித்தேன். அறிவித்ததற்கிணங்க 1984 முதல் 1986 டிசம்பர் முடிய 602 பணியாளர்கள் அப்படி இருக்கிறார்கள் என்று எனக்கு தென்பட்டார்கள். அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தலாம் என்று, பொதுப் பணித் துறையின் 22—1—1990 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 193-ல் பணிவரன் முறை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 310. அதைப் போலவே நியமன விதிகளை நிறைவு செய்யாத தினக் கூலிப் பணியாளர்களின் எண்ணிக்கை 816 ஆகும். அட்ஹாக் ரூல்ஸ்ஸுக்கு ஒத்து வராதவர்களை எல்லாம் ரெகுலரைஸ் செய்வது குறித்து இப்போது ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, நீண்ட காலமாக இருக்கும் இந்தப் பிரச்சினையை இந்த அரசே மனமுவந்து செய்திருப்பதற்கு, அம்மையார் அவர்கள் பாராட்ட வேண்டும். அம்மையார் கருத்தை அரசு கவனத்திலே கொள்ளும்.

1990 ஆகஸ்ட் 21]

திருமதி பாப்பா உமாநாத் : நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கூறியபடி நான் பாராட்டுவதற்குத் தயார். ஆனால் அவர்கள் கூறியபடி நடவடிக்கை எடுத்த பிறகு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கத் தயார். அதுவும் கேள்வி நேரத்திலே பாராட்டக் கூடாது என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தனியாக அந்த ஏற்பாட்டை வைத்துக் கொள்ளலாம். 1984–லிருந்து பல விவகாரங்கள் நடந்திருக்கின்றன. துரதிருஷ்டவசமாக அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. இப்போது தேர்வு செய்யப்பட்டிருப்பதால் தற்போதுதான் பார்க்கிறேன். அமைச்சர் சொல்வது போல் அல்ல. துவக்க காலத்திலேயே இந்தச் சபையிலே நான் அந்தக் கேள்வியை எழுப்பி அதைச் சொல்லியிருக்கிறேன். எனவே காலதாமதம் இல்லாமல் அமைச்சர் செய்தால் நிச்சயமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அம்மையாருக்குத் தெரிவித்து கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக அப்போது நான் அமைச்சராக இல்லை. போகட்டும். அம்மையார் இந்தக் கேள்வியை கேட்டதற்கு முன்னாலேயே இந்த அரசு 31—8—1990–க்குள் மீதி இருக்கின்ற அத்தனை பேர்களுடைய பணிப் புத்தகங்களை அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக பொதுப்பணித் துறையில் பி.இ. படித்த எலெக்ட்ரானிக் என்ஜினியர்ஸ் 37 பேர்கள் தற்காலிகமாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு ஏ.இ.க்கு உள்ள முழுச் சம்பளம் தரப்படுகிறது. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதுவும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசீலித்து விரைந்து நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது என்.எம்.ஆர். பொறுத்த கேள்வி. அந்தப் பணியாளர்கள் மீது இவ்வளவு அக்கறை செலுத்தும் திரு. சீனிவாசன் ஒரு தனிக் கேள்வி போடலாம்.

சனத்குமார் நதியில் அணைக் கட்டுதல்.

* 8128 திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;